1982 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அங்கே 40 கோடி ரூபாய் மதிப்பில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கேட்டுள்ளோம். மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல், அங்கே தேங்கியிருக்கிறது. நீல நிற கற்கள் அங்கே எவ்வளவு இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. இதற்கு முன்னால் ஆய்வு மேற்கொள்ளப்படாமல் இருந்தால், அதற்கான ஆய்வு அரசின் சார்பிலே மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தி

*வினா எண் 216—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உப்பு எங்கெங்கு அதிமாக உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு அரசின் உதவி என்ன?

(இ) நவீன முறையில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் அதிக அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது:—

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி மற்றும் வேப்பலோடை;

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் மனக்குடி மற்றும் கோவளம்.

(3) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர், வாலிநோக்கம்.

(4) தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிராமபட்டினம் மற்றும் வேதாரண்யம்.

(5) தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம்.

(6) செங்கல்பட்டு மாவட்டத்தில் கூணாம்பேடு கோவளம் மற்றும் எண்ணூர்.

(ஆ) விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு அரசின் உதவி ஏதும் இல்லை.

(இ) மாரியூர்—வாலிநோக்கத்திலுள்ள அரசு உப்பு தொழிற்சாலை, கோவளத்திலுள்ள இணை உப்பு நிறுவனமான மாருதி உப்பு நிறுவனம், வேதாரண்யத்திலுள்ள தனிப்பட்ட நிறுவனங்களான விம்கோ மற்றும் மேட்டூர் கெமிகல்ஸ் அண்டு இண்டஸ்டிரியல் கார்ப்பரேசன் ஆகியவை உப்பு தயாரிப்பதற்கான நவீன முறைகளை மேற்கொண்டுள்ளன.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற உப்பு மேற்கு வங்கம், பீகார் போன்ற மாநிலங்களுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த உப்பை ரயில் மூலம் கொண்டு சென்றால்தான் அதிகமாக விற்பனை செய்ய முடியும். ஆனால் ரயில் மூலம் உப்பைக் கொண்டு போக மத்திய அரசு தடை செய்திருப்பதால் உப்பை விற்பனை செய்ய சிரமம் இருப்பதால் தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்தி உப்பை ரயில் மூலம் எடுத்துச் செல்ல உதவி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இந்தியாவிலேயே குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில்தான் அதிகமாக உப்பு உற்பத்தி ஆகிறது. ஏறக்குறைய 45,889 ஏக்கரில் 16,75,000 டன் உப்பு உற்பத்தியாகிறது. தமிழ்நாடு உப்பு உற்பத்தியில் இந்தியாவிலே இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தச் சிரமங்கள் குறித்து மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு எழுதி வற்புறுத்தும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சூணாம்பேட்டிலும் கோவளத்திலும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். செங்கற்பட்டு மாவட்டம், செய்யூர் கிராமத்தில் அரிசன மக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. 1966, 1978-79ல் வீசிய புயலின் காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால் அரசு நிவாரணம் அளிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளில் உப்பு உற்பத்தி செய்யப்படுவதில்லை. தனியார் உப்பு உற்பத்தி செய்து அல்லது சொசைடி மூலம் உற்பத்தி செய்து வந்தது நிறுத்தப்பட்டிருக்குமானால் அரசுக்கு உதவி கோரி கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.

1982 பிப்ரவரி 15]

திரு. மு. அப்பாதுரை: எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் அதிகமாக உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார் முதலாளிகள் உப்பை ஏற்றுமதி செய்து அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்கள். மேற்கு வங்க அரசு இந்த உப்பை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் தமிழக சர்க்காரே நேரடியாக இந்த உப்பை ஏற்றுமதி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஏற்கனவே சொன்னது போல் 16,75,000 டன் உப்பு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப் படுகிறது. தமிழ் நாட்டில் உப்பு நிறுவனத்தின் சார்பாக உற்பத்தி செய்யப்படுகிற உப்பு அந்த நிறுவனத்தின் சார்பாக நேரடியாகவும், ஏஜண்டுகள் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்படு கிறது. தனியாரும் அதேபோன்று விற்பனை செய்து வருகிறார்கள். அரசே அனைத்தையும் ஏற்று வியாபாரம் செய்ய உத்தேசம் இல்லை.

தொழில் வளர்ச்சிக்குழு அமைக்கும் திட்டம்.

* வினா எண். 217—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக்குழு அமைக்க பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) தொழில் ஆலோசனைக்குழு ஒன்று மாநில அளவில் அமைக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாநில தொழில் ஆலோசனைக் குழு அமைக்க குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனை விரைவாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி அமைக்கிறபோது அதில் யார் யார் அங்கம் வகிக்கும் நிலைமை ஏற்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் சில அதிகாரிகளையும் தனியார் துறையில் — அந்தந்தத் துறைகளுக்கு ஏற்ப, எடுத்துக் காட்டாக சிமின்ட் உற்பத்தி என்று வருகிறபோது சிமின்ட் தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர், அதேமாதிரி சர்க்கரை உற் பத்தி என்று வருகிறபோது சர்க்கரை தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர் — அந்த அந்தப் பிரிவுகளிலே முன்னணியிலே இருக்கின்ற தனியார்கள், தொழிலதிபர்கள் இதைத்தவிர டெக்னோகிராட்ஸ் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை — அவர்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை அரசு தெரிந்து கொள்வதற்காகவும் தொழில் அபிவிருத்திக்கு அரசு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதை அரசு புரிந்து கொள்வதற் காகவும் —வெகு விரைவில் சுமார் 20 பேர்களுக்கு மேற்படாத அளவில் ஒரு குழுவை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.